ජේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර)
නොවැම්බර් / දෙසැම්බර් 2018
பொதுக் கலைத்தேர்வு (வெளிவாரி)
நவம்பர் / டிசம்பர் 2018
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL)
NOVEMBER / DECEMBER 2018

அரசியல் சமூகக் கோட்பாடு - PSG I

இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன.
எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.
ஒதுக்கப்பட்ட நேரம்: **மூன்று** (03) மணித்தியாலம்.

---

1. அரசியல் சமூகக் கோட்பாட்டினை கற்பதன் முக்கியத்துவத்தினையும் மற்றும் இயல்பையும் பரிசீலனை செய்க.

2. பின்வரும் அரசியல் எண்ணக்கருக்களில் **ஏதாவது ஒன்றினுடைய** முக்கியத்துவம் பற்றி கருத்துரைக்க.

   i. இறைமை
   ii. சுதந்திரம்
   iii. நீதி
   iv. உரிமைகள்
   v. சட்டத்தின் ஆட்சி

3. **ஒன்றில்** மரபுரீதியான தாராண்மைவாதம் **அல்லது** நவ தாராண்மைவாதத்தின் பிரதான இயல்புகளை விபரிக்குக.

4. பின்வருவனவற்றுள் **ஏதாவது ஒன்று** பற்றி ஒரு விமர்சனக் கட்டுரை எழுதுக.

   i. கற்பனா சோஷலிசவாதம்
   ii. மாவோயிசம்
   iii. ரோமானிய சட்ட,ம்

5. சோசலிசத்தின் அபிவிருத்திக்கு கால்மாக்ஸ் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பீடு செய்க.

6. "ஜனநாயகத்தின் அடிப்படைகளை பாசிசம் நிராகரிக்கின்றது" நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக?

P.T.O.

7. பின்வரும் கூற்றுக்களில் **<u>ஏதாவது ஒன்று</u>** பற்றி கருத்துரைக்க.

   i. அரிஸ்டோட்டில் அரசாங்கத்தின் நோக்கமானது குடியுரிமையாளர்கள் நீதியையும் இன்பத்தையும் அடைந்துகொள்ளுதலை சாத்தியமாக்குதல் என்று குறிப்பிட்டார்.

   ii. நவீன அரசியல் விஞ்ஞானத்தின் தந்தையாக நிக்கலோ மக்கியவல்லி காணப்படுகின்றார்.

8. அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்த கோட்பாட்டினை விளக்குக.

9. "ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் விளைவாகவே லெனினிசம் தோற்றம் பெற்றது" கருத்துரைக்க.

10. பின்வருவனவற்றுள் **<u>ஏதாவது இரண்டு</u>** பற்றி சிறு குறிப்புகள் எழுதுக.

    i. பெண்ணியத்தின் பிரதான இயல்புகள்
    ii. தேசியவாதத்தின் அடிப்படைகள்
    iii. பேபியன் சோசலிசத்தின் இயல்பு
    iv. அரசு மற்றும் சென் தோமஸ் அக்வைனசு

******

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර)
නොවැම්බර් / දෙසැම්බර් 2018
பொதுக் கலைத்தேர்வு (வெளிவாரி)
நவம்பர் / டிசம்பர் 2018
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL)
NOVEMBER / DECEMBER 2018

**இலங்கையின் அரசாங்கம் - PSG II**

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன.
எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.
ஒதுக்கப்பட்ட நேரம்: **மூன்று** (03) மணித்தியாலம்.

---

1. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட சர்வசன வாக்குரிமை தொடர்பாக விமர்சன ரீதியான கட்டுரையொன்றினை எழுதுக.

2. 1948ம் ஆண்டு சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழான பாராளுமன்றத்தின் அதிகாரங்களை முதலாம் குடியரசு யாப்பின் தேசிய அரசப்பேரவையின் அதிகாரங்களுடன் ஒப்பிடுக.

3. முதலாம் குடியரசு அரசியல் திட்டத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரதான விமர்சனங்களை கலந்துரையாடுக.

4. "இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பு ஜனாதிபதித்துவ (semi-presidential system) முறையானது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையிலான உறவின் தன்மையினை விளங்கிக்கொள்வதற்கு உதவுகின்றது." ஆராய்க.

5. இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் எவை. அரசியல் அமைப்பின் படி அவற்றை எவ்வாறு பாதுகாப்பது.

6. இலங்கையில் அரசியல் கட்சி முறைமையின் பிரதானப் பண்புகளை விளக்குக.

P.T.O.

7. 1978ம் ஆண்டு அரசியல் திட்டத்தின் கீழ் நீதித்துறை சுதந்திரம் தொடர்பாக கட்டுரையயொன்று வரைக.

8. 2018ம் ஆண்டினை இலங்கையின் அரசியலிள் ஒரு திருப்பு முனையாக குறிப்பிட முடியுமா? ஏன்.

******

ပේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර)
නොවැම්බර් / දෙසැම්බර් 2018
பொதுக் கலைத்தேர்வு (வெளிவாரி)
நவம்பர் / டிசம்பர் 2018
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL)
NOVEMBER / DECEMBER 2018

பொதுத்துறை நிர்வாகம் - PSG III

இவ்வினாத்தாளில் எல்லாமாக 09 வினாக்கள் உள்ளன.
எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.
ஒதுக்கப்பட்ட நேரம்: **மூன்று (03)** மணித்தியாலம்.

---

1. 'பொதுத்துறை நிர்வாகம்' என்பதனை வரையறை செய்து அதனை 'தனியார் நிர்வாகம்' என்பதிலிருந்து வேறுபடுத்துக.

2. பொதுத்துறை நிர்வாகக் கற்கைக்கு வூல்ட்றோ வில்சனின் பங்களிப்பு குறித்து பரிசீலிக்குக.

3. மெக்ஸ் வெபரின் கற்பனா வகையிலான பணியகத்தின் பிரதான அடிப்படைகளையும் பொது நிர்வாகத்தில் அதன் செல்வாக்கையும் விளக்குக.

4. 'ஒழுங்கமைப்பு' என்பதனை வரையறை செய்து அதன் பிரதான பண்புகளை விளக்குக.

5. ஒழுங்கமைப்பு குறித்த விஞ்ஞான முகாமைத்துவ கோட்பாட்டின் பிரதான பண்புகளை விளக்குக.

6. 'நிர்வாக வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றுக்கு அதிகாரப் பண்முகவாக்கமே அவசியமான அடிப்படையாக உள்ளது.' கருத்துரைக்குக.

7. பிரித்தானிய சிவில் சேவையை சீர்திருத்துவதற்கு நோர்த்-கோர்ட் ரவலியன் (Northcote-Trevelyan) அறிக்கையின் பரிந்துரைகளை பரிசீலிக்குக.

P.T.O.

8. ‘பிரான்ஸ் ஒரு நிர்வாக அரசு.’ கருத்துரைக்குக.

9. பின்வருவனவற்றுள் **எவையேனும் இரண்டுக்கு** சிறுகுறிப்புக்கள் எழுதுக.

i. அரசியல்-நிர்வாக வேறுபடுத்தல்
ii. புதிய பொது நிர்வாகம்
iii. POSDCoRB எண்ணக்கரு
iv. பொதுத்துறை நிர்வாகம் அரசியல்மயமாக்கலுக்கு உள்ளாதல்
v. இலங்கையில் மாகாண நிர்வாகம்

******